**IN THE COURT OF JUDICIAL MAGISTATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.110/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மல்லிகா | Prosecution | LW-2 as PW-3 |
| Husband Name | ஜீவரத்தினம் | Defence | |
| Village | செம்மங்குடி | Taluk | Sirkali |
| Calling | | Age | 60/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

09.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர் இல்லை மனு பெறப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் ஐஸ்வர்யா மற்றும் இந்த வழக்கின் எதிரி இந்திரா காந்தி ஆகிய இருவரையுமே தெரியும். இரண்டு பேருமே எனது வீட்டிற்கு அருகாமையில் தான் வசிக்கிறார்கள். கடந்த 11.03.2022ம் தேதி மாலை 3.30 மணிக்கு மேல், ஐஸ்வர்யா கல்லூரி முடித்துவிட்டு அவர் வீட்டிற்கு செல்லும் வழியில், அவருடைய பாட்டி வீடு அமைந்துள்ளது. அவர் தனது பாட்டி அழைத்ததாக அந்த பாட்டியின் வீட்டிற்கு உள்ளே சென்றார். சிறிது நேரம் கழித்து பலத்த சத்தம் கேட்டதால், நான் மேற்படி வீட்டுக்கு அருகே ஓடிச் சென்று பார்த்தபோது, இந்திரா காந்தி தனது கையில் ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு ஐஸ்வர்யாவை அடித்தார். நான் அதை பார்த்தேன். அதனால் ஐஸ்வர்யாவுக்கு தலையில் அடிபட்டு காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால், குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>CC.110/2022</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தரமணி | Prosecution | LW-3 as PW-4 |
| Husband Name | ரவி | Defence | |
| Village | செம்மங்குடி | Taluk | Sirkali |
| Calling | | Age | 45/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

09.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>எதிரி ஆஜர் இல்லை மனு பெறப்பட்டு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**மேற்படி நபர் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால், பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழக்கின் புகார்தாரர் ஐஸ்வர்யாவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் எதிரியையும் எனக்கு தெரியும். நாங்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவோம். கடந்த 11.03.2022ம் தேதி பகல் 3.00 மணிக்கு மேல் நானும் மல்லிகா என்பவரும் தனலட்சுமி வீட்டின் அருகே பேசிக் கொண்டிருந்தபோது, புகார்தாரருக்கும் எதிரிக்கும் நடந்த சண்டை சம்பந்தமாக சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>CC.110/2022</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சிவராஜகுரு | Prosecution | LW-6 as PW-5 |
| Father Name | சிங்காரவேலு | Defence | |
| Village | செம்மங்குடி | Taluk | Sirkali |
| Calling | | Age | 39/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
09.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>எதிரி ஆஜர் இல்லை மனு பெறப்பட்டு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி முகவரியில் வசிக்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் காணப்படுவது என்னுடைய கையொப்பம் கிடையாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சி அளித்ததால், பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு சிங்காரவேலு மகன் சிவசங்கர் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது அண்ணனாவார். கடந்த 12.03.2022ம் தேதி காலை 8.30 மணி அளவில் நானும் எனது அண்ணனும் எங்கள் ஊரில் உள்ள தனலட்சுமி வீட்டிற்கு முன்பு, நின்று பேசிக் கொண்டிருந்தபோது சீர்காழி போலீசார் எங்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும் அதற்கு சாட்சியாக நானும் எனது அண்ணனும் கையெழுத்து செய்தோம் என்றாலும் சரியல்ல. மேற்படி விவரங்களை போலீசார் விசாரணைகள் தெரிவித்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**